வெளியீடு- 1

# மகாத்மா காந்தி



காந்தி சேவா சங்கம்,

மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இச் சிறு நூல் காந்தி அடிகளின் நாற்பத்தோராவது சிரார்த்த தினத்தையொட்டி மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தினால் வெளியிடப்படுகிறது. இப்பொழுது வாழும் மூத்த தலைமுறையினர் காந்தியடிகள் வாழ்ந்த காலத்தில் வாழக் கொடுத்து வைத்தவர்கள் ஆனால் இளம் சந்ததியினரிற் பலர் காந்தி என்பவர் யார் என்றே அறியாமல் உள்ளனர். இது அவர்கள் குறையன்று. இளைஞர்களிடையே அந்த மகாத்மாவினது கருத்துக்களைப் பரப்ப வேண்டியது அவசியமானது. இந்த வகையில் இச்சிறு நூல் ஓரளவு உதவும் என்று நம்புகின்றோம்.

மகாத்மாவின் ஆத்ம கதை, அவரைப்பற்றிப் பிற அறிஞர்கள் எழுதிய நூல்கள், கட்டுரைகள் என்பவற்றிலிருந்து திரட்டப்பட்டுள்ள செய்திகள் இச்சிறு நூலில் தரப்பட்டுள்ளன.

வ. சிவசுப்பிரமணியம்
தலைவர்.

காந்திசேவா சங்கம்,
மட்டக்களப்பு
30 - 01 - 1989.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தி

1869ம் வருடம் ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி பாரத நாட்டில் போர்பந்தர் என்னுமிடத்தில் காந்தி பிறந்தார். காந்தியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போர்பந்தர் அரசரிடம் உத்தியோகம் புரிந்து வந்தார்கள். காந்தியின் தந்தை கரம்சந்த் காந்தியும் (காபா காந்தி என்பதும் அவர் பெயர்) அரசரின் உத்யோகத்தராக இருந்தார். தமது தாயாரைப் பற்றிக் காந்தியடிகள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'என் தாயாரைப்பற்றி எண்ணும் போது அவருடைய தவ ஒழுக்கமே முதன்மையாக நினைவுக்கு வருகிறது. அவர் பெரிதும் சமயப் பற்றுக் கொண்டவர். தினசரி தெய்வப் பிரார்த்தனை செய்யாமல் அவர் உணவு உட்கொள்ள மாட்டார்.' இத்தகைய அன்னை புத்லிபாய் பெற்றெடுத்த பிள்ளை காந்தி. முழுப்பெயர் கரம்சந்த் மோகனதாஸ் காந்தி என்பது.

பெற்றோரின் கடைக்குட்டியான செல்லப் பிள்ளை காந்தி இளமையில் பயமும் கூச்ச சுபாவமுமுள்ள ஒரு குழந்தையாக இருந்தார் பாடசாலையிலும் சகமாணவர்களோடு கலந்து. பழகுவதைத் தவிர்த்து வந்தார் "படிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் என்னுடைய ஆசிரியர்களிடமாவது சக மாணவர்களிடமாவது எப்போதேனும் பொய் சொன்னதாக எனக்கு ஞாபகமில்லை'' எனத் தமது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நாள் காந்தி படித்த பாடசாலைக்குக் கல்விப்பரிசோதகர் ஒருவர் வந்தார். காந்தியின் வகுப்புக்கும் சென்று பரிசோதித்தார். ஆங்கிலத்தில் ஐந்து சொற்களைக் குறிப்பிட்டுச் சொல்லி அவற்றை எழுதிக்காட்டும்படி கேட்டார். அச் சொற்களில் ஒன்று (KETTLE) என்பது. அதனைக் காந்தி பிழைபட எழுதினார். பின்னலிருந்து கவனித்துக் கொண்டிருந்த அவருடைய ஆசிரியர் தமது செருப்பு நுனியால் சிறுவன் காந்தியின் காலைச் சுரண்டிப் பக்கத்துப்பையன் எழுதியதைப் பார்த்து எழுதும்படி தூண்டினர். ஆனல் மற்றொருவர் எழுதியதைப் பார்த்து எழுத அவர் மனம் துணியவில்லை. "இந்நிகழ்ச்சியினல் ஆசிரியரிடம் எனக்கிருந்த மதிப்பு எள்ளளவும் குறையவில்லை. பெரியவர்களின் குறைகளைப் பொறுத்தவரையில் குருடனயிருப்பது என் இயற்கையாக இருந்தது...... மூத்தோரின் கட்டளைகளை நிறைவேற்றிவிட்டு அவர்களுடைய செயல்களைப் பற்றிக் கவலைப்படாமலிருப்பதற்கு நான் கற்றுக் கொண்டிருந்தேன்'' என்று காந்தி கூறுகிறர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தியின் இளம் பராயத்தில் அவருக்கு ஏற்பட்ட சிறிய ஆனால் ஆழமான இரண்டு அநுபவங்களை நாம் கவனிக்க வேண்டும். தந்தையிடமிருந்த 'சிரவண பித்ரு பக்தி நாடகம்' என்ற சிறிய நாடக நூலை எடுத்துக் காந்தி படித்துப் பார்த்தார். அதே சமயத்தில் படக்காட்சி காட்டுபவர்கள் அந்த ஊரில் முகாமிட்டு இருந்தார்கள். அவர்களும் சிரவணனுடைய கதையை படமாகக் காட்டினார்கள். சிரவணன் கண்ணிழந்த முதியவர்களான தனது தாயையும் தந்தையையும் காவடியில் வைத்துத் தூக்கிக் கொண்டு போகும் காட்சி அவரைப் பெரிதும் கவர்ந்தது.

மேற் கூறிய சம்பவம் நிகழ்ந்த நாட்களில் ஒரு நாடகக் குழுவினர் நடித்துக்காட்டிய அரிச்சந்திர நாடகத்தையும் காந்தி பார்த்தார். அந்த நாடகம் அவர் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. சத்தியத்தைக் காக்க அரிச்சந்திரன் பட்ட துன்பங்களை எல்லாம் தானும் அநுபவிக்க வேண்டும் என்று சிறுவன் காந்தி நினைத்துக் கொண்டான்.

இவ்வாறு சிரவணன் வரலாறும் அரிச்சந்திரன் கதையும் அவரது பிஞ்சு உள்ளத்தில் பதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட இரு விதைகளாக இருந்து பிற்காலத்தில் சேவை, சத்தியம் என இரண்டு விருட்சங்களாக வளர்ந்து உறுதி பெற்றதை நாம் அறிவோம்.

காந்திக்கு பதின்மூன்று வயதான போது அவரது திருமணம் நடைபெற்றது. மணமகள் கஸ்தூரிபாவுக்கும் அதே வயது. திருமணம் பற்றி எந்தவித அபிப்பிராயமுமில்லாத இத்தகைய குழந்தைகளின் திருமணம் மிகத்தவருனது எனப் பிற்காலத்தில் காந்தி வன்மையாகக் கண்டித்தார். ''பதின்மூன்ருவது வயதில் நடந்த விவாகத்தைச் சரியென்று நிலைநிறுத்த நீதிபொருந்திய எவ்வித தருக்கமும் என் மண்டையில் நுழைய முடியாது'' என்று அவர் குறிப்பிடுகிறுர். எப்படியாயினும் அன்னை கஸ்தூரிபாவும் மகாத்மா காந்தியும் சுமர் அறுபது வருடங்கள் ஒருவருக்கொருவர் உறு துணையாக இல்லறம் நடத்தி வந்தது வேறு கதை.

பாடசாலையில் படிக்கும் பொழுது எழுத்தை அழகாக எழுதவேண்டுமென்பதை அசட்டை செய்துவந்தமையால் தமது எழுத்து பெரியவராகிய காலத்தும் திருந்தாமல் விட்டதைப்பற்றி அவர் மனம் வருந்தினுர். அழகாக எழுதுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிச் சிறுவர்களுக்கு ஓர் ஆலோசனை வழங்கியுள்ளார். அதாவது "பொருட்களைப் பார்த்துச் சித்திரம் வரையக் கற்றுக் கொண்டதன்பின் தான் எழுத்து எழுதக் கற்கவேண்டும். இப்படிச் செய்தால் அழகிய கையெழுத்துப் படியும்" என்பது அவர் கருத்து.

மாணவப் பருவத்தில் காந்திக்கு ஒரு இளைஞனுடன் நட்பு ஏற்பட்டது. காந்தி சைவ உணவு உண்ணும் குடும்பத்தில் பிறந்தவர். நண்பனே மாமிசம் புசிப்பதில் விருப்பமுள்ளவன். அவன் காந்தியையும் மாமிசம் உண்ணும்படி தூண்டினான். ஆங்கிலேயர் மதுவும் மாமிசமும் உண்பதால் வலுவான தேகத்தை உடையவர்களாயிருக்கிறார்கள். இந்தியர்களோ சைவ உணவு உண்டு நோஞ்சான்களாக இருக்கிறார்கள். இதனால் ஆங்கிலேயன் இந்தியனை அடிமையாக்கி வைத்திருக்கின்றான். ஆங்கிலேயனை நாட்டை விட்டு ஓட்டவேண்டுமானால் இறைச்சியையும் மதுவையும் உண்டு இந்தியரும் தமது தேக பலத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு நண்பன் வாதம் புரிந்தான். காந்தி அவன் வலையில் விழுந்துவிட்டார். அடிமைத்தனம் நீங்குவதற்குப் புலால் உண்பதுதான் வழி என்ற அவனது வாதத்தில் காந்தி மயங்கி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி இரகசியமாக நண்பனுடன் புலால் சேர்ந்த உணவு உண்டார் இவ்வாறு சில முறை நடந்தது இரகசியமாக புலால் உண்பதன் மூலம் தமது பெற்றோரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறோமே என்ற எண்ணம் காந்தியின் நெஞ்சைச் சுடத்தொடங்கியது. மறுமுறை நண்பனைச் சந்தித்தபோது புலால் உண்பது அவசியமாயிருக்கலாம். ஆனால் பெற்றோரிடம் பொய் சொல்லி ஏமாற்றுவது கொடிது. ஆகையால் என் பெற்றோர் உயிரோடு இருக்கும் வரை நான் புலால் உண்ணமாட்டேன். அவர்களுடைய காலத்துக்குப் பிறகு அவசியமானல் புலால் உண்பதைப்பற்றி யோசிக்கலாம் என்று சொல்லி விட்டார்.

இவ்வாறே இரகசியமாகச் சுருட்டுக் குடிக்கவும் சுருட்டு வாங்குவதற்கென பணம் திருடவும் கெட்ட நண்பர்கள் அவரைத் தூண்டினர். மீண்டும் தெய்வ சங்கற்பமோ பெற்றோர் மீது அவர் கொண்டிருந்த பேரன்போ அவரைத் தடுத்தாட்கொண்டது. தான் செய்த குற்றங்களையெல்லாம் குறிப்பிட்டு அதற்காகத் தன்னை மன்னிக்கும்படி கேட்டு தந்தைக்கு ஒரு கடிதம் வரைந்தார். நோய்ப்படுக்கையிலிருந்த தந்தையிடம் அதனைக் கொடுத்தார். கடிதத்தை வாசித்த தந்தையின் கண்களிலிருந்து நீர் வழிந்தோடியது. ஒரு நிமிடம் சிந்தனையில் ஆழ்ந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்த அவர் இறுதியில் கடிதத்தைக் கிழித்துப் போட்டார். கடிதத்தை வாசிப்பதற்காக நிமிர்ந்து உட்கார்ந்த அவர் மீண்டும் படுத்துக்கொண்டார். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சிறுவன் காந்தி தாமும் அழத்தொடங்கினர். "அந்த அன்புக் கண்ணீர்த் துளிகளினுல் என் இருதயம் சுத்தமாயிற்று, என் பாவம் நீங்கிற்று" எனக் காந்தி சுயசரிதத்தில் குறிப்பிடுகிருர்.

மேலும் காந்தி கூறுகிருர்! "சில சமயங்களில் மனிதன் எவ்வளவு முயன்றபோதும் தடுக்க முடியாமல் ஆசை வலையில் வீழ்ந்து விடுகிருன். சில சமயங்களில் ஆசை வலையில் விழப்போகும் சமயத்தில் தெய்வம் குறுக்கிட்டுத் தடுத்தாட்கொள்கிறது. இவையெல்லாம் எப்படி நேரிடுகின்றன. மனிதன் தன் செயல்களுக்கு எவ்வளவு தூரம் எஜமானன், எவ்வளவு தூரம் சந்தர்ப்பங்களுக்கு அடிமை, மனிதமுயற்சி எந்த அளவுக்குப் பயன்படும், விதி எவ்விடத்தில் குறுக்கிடுகிறது. முதலிய விஷயங்கள் நம்மால் அறியக்கூடாத இரகசியங்களாக உள்ளன. என்றும் அவை மர்மமாகவே இருக்கும்."

காந்தியின் சிறுவயதில் அவர்கள் வீட்டில் அரம்பை என்ற பெண் வேலை செய்து வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சிறுவன் காந்தியின் மீது மிகுந்த அன்பு கொண்டவள். காந்திக்கு இளம் வயதில் பேய்கள் பற்றிய நம்பிக்கையும் பயமும் இருந்தது. இப்பயத்தை நீக்கும் மருந்தாக ராம நாமத்தைச் செபிக்கும்படி அரம்பை உபதேசித்தாள். அப்படியே காந்தியும் ராம நாமத்தைச் செபித்துவந்தார். பிற்காலத்தில் ராம நாமமே தமக்கு அருமருந்தாக இருந்து வந்ததற்கு அரம்பை விதைத்த விதையே காரணம் எனக் காந்தி கருதினர்.

காந்தியின் தந்தை காலமாகிவிட்டார் பள்ளிப்படிப்பும் முடிந்துவிட்டது. இனி என்ன செய்வது என்ற பேச்சு எழுந்தது. குடும்ப நண்பர் ஒருவர் காந்தி இங்கிலாந்து சென்று பரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்க வேண்டுமென்று ஆலோசனை கூறினர். இது அப்பொழுது குடும்பத் தலைவராக இருந்த காந்தியின் சிறிய தந்தைக்கும் அன்னை புத்லிபாய்க்கும் சம்மதமாயில்லை. உயர் கல்விகற்க இங்கிலாந்து சென்றவர்களிற் பலர் அந்த நாட்டுக் கலாச்சாரத்தைப் பின்பற்றி மது மாமிசம் உண்ணப் பழகி ஆங்கிலேயர் போல் உடையணிந்து திரும்பி வந்து ஆங்கிலத்துரை போல நடிப்பதைக் கண்ட அன்னை புத்லிபாய் தன் மகனும் அவ்வாறு நடந்துகொள்வானே என்று பயந்தார். எனினும் மகன் படிப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்து செல்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதைக் கண்டு மது, மாமிசம், பெண்கள் தொடர்பு - இவைகளை நாடுவதில்லையென்று மகன் சத்தியம் செய்து கொடுத்தால் தான் சம்மதிப்பதாகக் கூறினர். காந்தியும் அவ்வாறே செய்தார்.

இங்கிலாந்தில் வாழ்ந்தபோது காந்தி பல அநுபவங்களைப் பெற்ருர். உணவு உடை விஷயத்தில் ஒரு ஆங்கிலக் கனவான் போல வாழவேண்டியிருந்தது. சைவ உணவைத் தேடி உண்பது நிரம்பக் கஷ்டங்களை ஏற்படுத்தியது. பெரும்பாலும் ரொட்டியும், பழமும் பாலுமே, அவர் உணவாக இருந்தது. உடலுக்கு நன்மை தரும் மலிவான உணவு வகைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்தார். முட்டை சைவ உணவில் சேருமா அசைவ உணவில்சேருமா என்பது கேள்வி. முட்டை உண்பதால்ஒருயிருக்கும் வருத்தம் ஏற்படுத்தப்படுவதில்லை. எனவே அதை உண்பதில் தவறில்லை என்று நண்பர்கள் சுட்டிக் காட்டினர்கள். காந்தியும் அதனை ஏற்றுக்கொண்டு முட்டையையும் தமது உணவில் சேர்த்துக் கொண்டார். ஆனல் இந்த மயக்கம் அதிக நாள் நீடித்திருக்கவில்லை. இது சம்பந்தமாகக் காந்தி பின் வருமாறு கூறினர். நான் சத்தியஞ் செய்து கொண்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்னையிடமே அவர் அசைவ உணவு அல்லது புலால் உணவு உண்ணக் கூடாது என்று என்னைக் கேட்டுக் கொண்டபோது அவர் கருத்தில் புலால் உணவில் முட்டையும் அடங்கும் என்பது நான் அறிந்ததே. நான் பிரதிக்கினை (சத்தியவாக்கு) செய்தது அன்னையிடம் என்பதால் இந்த வாக்குறுதியின் விளக்கத்தில் அன்னையின் கருத்து எதுவோ அதனையே நான் ஏற்றுக் கொள்ளவேண்டும். இவ்வாறு கருதிய காந்தி முட்டை உண்பதை உடனே விட்டு விட்டார்.

இந்தப் பிரதிக்கினை அல்லது சத்தியவாக்குப் பற்றிய காந்தியடிகளின் விளக்கம் நாம் எல்லோரும் பின்பற்ற வேண்டியது. ''யார் முன்னிலையில் பிரதிக்கினை செய்கிறோமோ அவர்கள் அந்தச் சத்தியவாக்கிற்கு கொடுக்கும் விளக்கத்தையே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் இது சிறந்ததாகும். இரு பொருள் தரக் கூடிய சத்தியவாக்கில், பலத்தில் குறைந்தவரின் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது அடுத்ததாகச் சிறந்ததாகும். இவ்விரண்டு முறைகளும் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் பொய்யில் முளைத்தெழுந்த சச்சரவும் அநீதியும் விளையும்'' என்பன மகாத்மாவின் மணிமொழிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி இங்கிலாந்தில் பரிஸ்டர் பட்டம். பெற்று 1891ம் ஆண்டு ஜுன் மாதத்தில் இந்தியா திரும்பினுர். ஒரு வழக்கில் வாதாடுவதற்காக 1893ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தென் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார்.

தென் ஆபிரிக்கா நீகிரோ இனத்தைச் சேர்ந்த மக்களின் தாய்நாடு. அங்கு குடியேறிப் பிழைக்க வந்த வெள்ளையர்கள் தமது ஆயுத பலத்தால் அந்த மக்களை அடிமைகளாக்கி மிகக் கேவலமாக நடத்திஞர்கள். இந்த வெள்ளையர்களின் தோட்டங்களில் கூலி வேலை செய்ய தென்னிந்தியர்களில் பலர் ஒப்பந்தக் கூலிகளாக அங்கு சென்ருர்கள். வெள்ளைத்தோல் கொண்ட தாம் உயர்ந்த ஜாதியினர் என்றும் கறுப்பு நிறங் கொண்ட மக்கள் எல்லோரும் இழிந்தவர்கள் என்றும் தென்னுபிரிக்கா வெள்ளையர் கருதினர். தென்னுபிரிக்காவில் 'கூலி' என்பதற்கு கூலி வேலை செய்பவன் என்ற பொருள் மட்டுமல்ல; அடிமை, இழிந்தவன் என்ற பொருளும் உண்டு. அக்காலத்தில் தென் ஆபிரிக்காவில் கறுப்பு நிற மக்கள் பொதுப் பூங்காவில் உலாவ முடியாது. புகைவண்டியில் முதலாம் வகுப்பில் பயணம் செய்ய முடியாது. உணவு விடுதிகளிலும் வெள்ளையர் உட்காரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் கறுப்பர்கள் உட்காரமுடியாது. நியாய வாதியாகிய காந்தி முதலாம் வகுப்பில்பிரயாணஞ் செய்தார் என்பதற்காக நடுராத்திரியில் குளிர் வாட்டும் நேரத்தில் காடுகளுக்கு மத்தியில் இருந்த ஒரு சிறிய கிராமத்தில் வெள்ளையன் ஒருவனுல் வெளியே தள்ளி விடப்பட்டார். அவருடைய பொருட்கள் வெளியே வீசப்பட்டன. காந்தி தாம் வந்த காரியத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பவிருந்த சமயத்தில் இந்தியரின் வாக்குரிமையைப் பறிக்கும் சட்டவரைவு ஒன்று தென்னுபிரிக்கப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது. சட்டத்தை எதிர்த்து வேலை செய்வதற்காக காந்தியை அங்கு நிறுத்திவைக்க தென்னுபிரிக்க இந்தியமக்கள் விரும்பினர் காந்தியும் சம்மதித்தார். ''இவ்வாறு ஆண்டவன் தென் ஆபிரிக்காவில் எனது வாழ்க்கைக்கு அடி கோலினுன். தேகிய சுயமரியாதைக்கான விதை விதைத்தான்'' என்று காந்தி குறிப்பிடுகிறுர்.

தென்னுபிரிக்க இந்தியமக்களின் உரிமைப் போராட்டத்தை காந்தி தலைமை வகித்து நடத்திஞர். இடையிடையே இந்தியாவுக்கு வந்து திரும்பிய காலத்தையும் சேர்த்துக் கணக்கிட்டால் காந்தி தென்னுபிரிக்காவில் பன்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரண்டு வருடங்களைக் கழித்துள்ளார். அங்குதான் சத்தியாக்கிரக தத்துவம் பிறந்தது. இந்த உரிமைப் போர் பற்றிய விவரங்களை அவர் எழுதிய 'தென்னுபிரிக்க சத்தியாக்கிரகம்' என்ற நூலில் விரிவாகக் காணலாம்.

தென்னுபிரிக்கா போன்ற அயல் நாடுகளில் வாழும் இந்தியர்களின் குறை தீரவேண்டுமானுல் முதலில் இந்தியா சுதந்திரம் அடையவேண்டும் என்று காந்தி நினைத்தார். முதலில் செய்ய வேண்டிய கருமம் அதுவேயென்பதை காந்தியின் இந்திய நண்பர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டி அவரை இந்தியாவுக்குத் திரும்பும்படி தூண்டினர்.

1915ம் ஆண்டு காந்தியடிகள் தாய் நாடு திரும்பினுர். அந்த ஆண்டிலிருந்து இந்தியா சுதந்திரம் அடையும் வரை இந்திய சுதந்திரத்திற்காக ஓயாது உழைத்தார். மக்களின் அரசியல் அடிமைத் தனத்திற்கு இந்திய சமூகத்தில் நிலவும் பல குறைபாடுகளும் காரணம் என்பதை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இதனுல் அவரது உழைப்பு பல துறைகளில் விரிவடைந்தது. தீண்டாதார் சேவை, கதர் இயக்கம், ஆதாரக்கல்வி, பெண் உரிமை இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-முஸ்லிம் ஒற்றுமை, மொழிப்பிரச்சினை ஆகிய பல துறைகளிலும் அவரது தொண்டுகள் விரிவடைந்தன. அவரது ஒப்பற்ற தலைமையை இந்தியமக்கள் அனைவரும் ஒரே முகமாக ஏற்றுக் கொண்டனர். அவரது சொற்கள் மந்திர சக்தி போல் மக்களை வீறு கொண்டெழச் செய்தன. கிராமவாசிகள் முதல் நகரவாசிகள் வரை, ஏழைகள் முதல் பெரும் பணக்காரர் வரை, எழுத்தறிவில்லாதவன் முதல் பெரிய அறிஞர்கள் வரை தொண்டர்கள் முதல் தலைவர்கள் வரை எல்லோருமே காந்தியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டனர். அவரை வெறும் அரசியல் தலைவராக அல்ல தேசத்தின் தலைவராக, தந்தையாகப் போற்றினர்கள். ''அவரது காலத்திற்கு முன்பே அரசியல் துறையிலும் சமூகத் துறையிலும் சமயத் துறையிலும்தோன்றியிருந்த உணர்ச்சிகளையும் இயக்கங்களையும் காந்தி தமது அருட்பிரசாத மகிமையினுல் அரசியல் சுதந்திரப் போருக்கு வேண்டிய சக்தியாக மாற்றினுர்'' என ராஜாஜி கூறுகிறுர்.

காந்திஜியின் தலைமையில் நடந்த இந்திய சுதந்திரப் போர் உலக வரலாறு காணுத உன்னதமான ஒப்பற்ற நிகழ்ச்சி. அப்போது மக்களும் மக்கள் தலைவர்களும் தோளோடு தோள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து நின்று அந்த உத்தமமான போரில் ஈடுபட்டனர். சோகமும், துயரமும், தியாகமும் மரணமும் இந்திய மக்களை அணுவளவேனும் அசைக்க முடியவில்லை. காந்தியடிகள் தனிப் பட்ட முறையில் எவ்வளவோ கஷ்டங்களை அநுபவித்தார் அரசியல் சமூக காரணங்களுக் காக அவர் பதினாறு முறை உண்ணாவிரதம் அநுட்டித்தார். சில உபவாசங்கள் அவரை மரணத்தின் வாயில் வரை அழைத்துச் சென்றன. இறுதியில் 1947ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் திகதி நள்ளிரவில் இந்தியா சுதந்திரம் பெற்றது. எனினும் காந்தியடிகளின் நன்னோக்கங்களைப் புரிந்து கொள்ள முடியாத மக்களும் இருந்தனர். சுதந்திரத்திற்கு பின் இந்து- முஸ்லிம் ஒற்றுமைக்காக இன்னும் ஒரு முறை காந்திஜி உண்ணாவிரதம் அநுட்டித்தார். இதற்குச் சில நாட்களின் பின் கோட்ஸே என்பவனால் 1948ம் ஆண்டு ஜனவரி மாதம் முப்பதாம் திகதி மாலையில் சுட்டுக்கொல்லப் பட்டார். மகாத்மாவின் வாயிலிருந்து இறுதி யாக வெளிவந்த வார்த்தை (ஹே! ராம்) ராமா என்பதே. தெய்வத்தை ராமன் வடிவில் வழி பட்ட அந்த மகான் அத் தெய்வத்தின் பெயரை உச்சரித்துக் கொண்டே உயிர் நீத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்திடிகளின் எண்ணங்களுக்கெல்லாம் வார்த்தைகளுக்கெல்லாம் செயல்களுக்கெல்லாம் அசைக்க முடியாத கடவுள் நம்பிக்கையும் அக் கடவுள் மீது கொண்ட தீவிர பக்தியுமே அடிப் படையாக அமைந்திருந்தன. ''கடவுளின் சிறந்த தன்மைகள் எல்லாவற்றுள்ளும் சத்தியத்தை அவர் வற்புறுத்தினர். சத்திய ரூபமான கடவுளை அடைவதற்கு மார்க்கத்தையும் காட்டினர். அது உண்மை, தளராத ஆர்வம், அன்பு, எவ்வுயிர்க் கும் துன்பஞ் செய்யாமை எனக்காட்டி நிரூபித் தார்' என்பர் ராஜாஜீ.

அவர் ஒரு சிறந்து இந்துவாக வாழ்ந்தார். கடவுள் மீது சந்தேகமற்ற அசைக்க முடியாத பூரண நம்பிக்கை கொண்டிருந்தார். இந்த நம் பிக்கையை அவரது பின்வரும் வார்த்தைகள் ஆணித்தரமாக வெளிப்படுத்திக் காட்டுகின்றன. ''நீங்களும் நானும் இந்த அறையில் உட்கார்ந் திருப்பது எப்படி உண்மையோ அதைப்போல் கடவுள் இருக்கிறர் என்பது உண்மை இதை நான் நிச்சயமாக நம்புகின்றேன். காற்றும் நீரும் இல்லாமல் நான் உயிர் வாழ்ந்து கொண்டிருந் தாலும் இருப்பேன், அந்தப் பரம் பொருள் இல் லாமல் என்னல் இருக்கவே முடியாது. என் கண் களை நீங்கள் பிடுங்கிவிடலாம் அஃது என்னைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லாது, என் மூக்கை நறுக்கிவிடலாம் அஃது என்னைக் கொல்லாது, ஆனால் கடவுளின் மீது எனக்குள்ள நம்பிக்கையைப் பிளந்து விடுங்கள் அப்பொழுது நான் இறந்துபட்டவன் தான்!''

அவர் தான் அநுட்டிக்கும் இந்துமதத்தில் மிகுந்த மதிப்புள்ளவர். தாம் ஒரு இந்துவாகப் பிறந்ததில் பெருமைப்படுவதாகவும் கூறியுள்ளார். அதேசமயத்தில் பிறமதங்களையும் மதித்துப் போற்றினர். ஒவ்வொருவரும் தாம் பிறந்த மதத்தின் மீது நம்பிக்கை வைத்து அதன் மூலம் இறைவனை அடைய முயற்சி செய்யவேண்டும் என்று ஊக்குவித்தார். ''என்னுடைய மதமே மற்ற மதங்களைக்காட்டிலும் சிறந்தது, பிறமதத்தில் சேருமாறு செய்வது நியாயந்தான் என்று நீ நம்புவாயானல் அஃது எதனைக் காட்டுகிறது உன்னிடத்தில் மதத் துவேஷம் அதிகமாகக் குடிகொண்டிருக்கிறது என்பதையே காட்டுகிறது. இப்படிப் பிற மதங்களிடத்தில் சகிப்புத் தன்மை காட்டாமலிருப்பது பலாத்காரத்தின் ஓர் அம்சமாகும்'' என்று அவர் மக்களுக்குப் போதித்தார்.

அன்பு, அஹிம்சை, சத்தியம், கடவுட்பக்தி என்பன இந்துமதத்திற்குப் புதிய தத்துவங்களல்ல, ஆனல் காந்திமகான் இவற்றைக் காலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குப் பொருத்தமான வகையில் அழுத்தமாக வற்புறுத்தினர். தமது வாழ்க்கையில் கடைப் பிடித்துக் காட்டினர்.

காந்தியடிகள், அவருக்கு பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்த இந்து ஞானிகளைப் போன்று மனித வாழ்க்கையை முழுமையாக நோக்கினர். மதம் வேறு அரசியல், வேறு என்ற போலி வாதத்தை காந்திஜி விலக்கித் தள்ளினர். அரசியல், தொழில், வியாபாரம் எல்லாமே தரு மத்தோடு கலந்த விஷயங்கள், அனைத்துக்கும் தருமத்தை உரை கல்லாக வைத்துக்கொள்ள வேண்டும். கடவுளை ஆலயத்துக்குள் தள்ளிப் பூட் டிவைத்துவிட்டு உலகியலில் தாம் விரும்பியபடி யெல்லாம் நடந்து கொள்வதை அவர் வன்மை யாக எதிர்த்தார். எந்தத் துறையிலும் தருமத் துக்கு விரோதமான - கடவுளுக்கு அடுக்காத செயல்களில் ஈடுபடக் கூடாது என்பதை அவர் மீண்டும் மீண்டும் வற்புறுத்தினர். இதனுலேயே அவர் அரசியலில் மதக் கொள்கைகளை தாராள மாக வற்புறுத்தினர்.

ஒரு நல்ல இலட்சியத்தை அடைவதற்கு எந்த வழியாலும் முயற்சிக்கலாம் என்ற கருத்தை மகாத்மா காந்தி ஒதுக்கி விட்டார். ஒரு பயனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவதற்கு அறத்திற்குப் புறம்பான முறைக ளையும் கையாளலாம் என்ற கருத்து மிகத்தீங்கு விளைவிக்கும் என்று விளக்கினார். இலட்சியம் சிறந் ததாக அறத்தினின்று வழுவாததாக இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வாறே அந்த இலட்சியத்தை அடையும் வழியும் தருமத் திலிருந்து விலகாததாக இருக்கவேண்டும் என்பதை அவர் அழுத்தந் திருத்தமாக வற்பு றுத்தினார். இந்த வழியில் போரிடுவோரே உண் மையான சத்தியாக்கிரகி.

"நீ செய்யவேண்டிய காரியங்களைச் செய். பயனில் பற்று வைக்காதே. இதுவே சந்நியாசம்" என்பது கண்ணன் போதித்த உண்மை. காந்தி மகானின் போதனையும் இதுவே, இதனையே கர்மயோகம் என்பார்கள். "ஆயினும் காந்தி ஜியின் மார்க்கம் பக்தி மார்க்கமே," என்பார் ராஜாஜி. காந்தி மகானின் காலை - மாலைப் பிரார்த்தனைகள் சாதிமதபேதமின்றி எல்லோரை யும் கவர்ந்தன. உடலுக்கு உணவுபோல உள் ளத்துக்கு உணவாக விளங்குவது கடவுட் பிரார்த் தனை. காந்தியின் பிரார்த்தனையில் கீதை, குர் ஆன், பைபிள் முதலிய நூல்களிலிருந்து பிரார்த் தனைகள் வாசிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இத்தகைய மானுடன்- நம்மைப் போலவே ஊனும் குருதியுமான மனிதன் ஒருவன் இந்த அற்புத சாதனையோடு இம்மண்ணிலே வாழ்ந்தான் என்பதை வருங்கால மக்கள் நம்பத் தயங்குவார்கள்" என்றார் ஒரு புகழ் பெற்ற மேனாட்டுப் பெரியார்.

## மகாத்மா காந்தி நாமம் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்தி அடிகளின் அருளுரைகளில் இருந்து:

''நாமெல்லோரும் எளிதில் அடையக்கூடிய மாதிரி அவ்வளவு சமீபத்தில் ஒரு சக்தி இருக்கிறது. அஃது - அந்த அன்புச் சக்தி - எத்தனையோ கொடுமைகளை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றலை மனிதனுக்கு அளித்திருக்கிறது. இன்னமும் அளித்துக் கொண்டிருக்கும்,''

★

''என்னைப் பொறுத்தமட்டில் முத்திக்கு வழி எங்கே இருக்கிறதென்றால், எனது தேசத்திற்காகவும், மனித சமுதாயத்திற்காகவும் ஓயாமல் தொண்டு செய்து கொண்டிருப்பதிலே தான்''

★

''ஒருவன் தன்னுடைய தவறுகளை மிகைப் படுத்தியும் பிறருடைய தவறுகளை சிறிதாக்கியும் பார்க்கப் பயின்றால் மட்டுமே இரண்டையும் நியாயமாக மதிப்பிடக் கூடுமென்பது என் கொள்கையாகும்''

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித செபஸ்தியார் அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org